**அக்டோபர் – 08**


# TNPSC துளிகள்

- தமிழ்நாடு அரசானது, மத்தியப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தானில் 11 குழந்தைகள் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அக்டோபர் 01 ஆம் தேதி முதல் 'Coldrif' என்ற இருமல் நிவாரணி மருந்து விற்பனையைத் தடை செய்துள்ளது.
- KONKAN-2025 எனப்படும் இந்தியக் கடற்படைக்கும் ஐக்கியப் பேரரசின் கடற் படைக்கும் இடையிலான இருதரப்பு பயிற்சியானது சமீபத்தில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் தொடங்கியது.
- இராஜஸ்தானின் முதல் நமோ பல்லுயிர்ப் பெருக்கப் பூங்காவானது அல்வாரின் பிரதாப் பந்தில் திறக்கப்பட்டது.
- இங்கிலாந்து திருச்சபையின் 500 ஆண்டுகால வரலாற்றில் முதல் பெண் கேன்டர்பரி பேராயராக டேம் சாரா முல்லல்லி உள்ளார்.
- நிஷாத் குமார் புது டெல்லியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான முதல் உலக தடகளச் சாம்பியன்ஷிப் போட்டியின் T47 உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- ஜப்பானின் ஆளும் கட்சியான லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் (LDP) சனே தகைச்சி ஜப்பானின் முதல் பெண் பிரதமராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- இந்தியக் கடற்படையானது, குறைவான ஆழம் கொண்ட பகுதியில் இயங்கும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர் கப்பல்கள் தொடரில் (ASW-SWC) கட்டமைக்கப்பட்ட ஐஎன்எஸ் ஆண்ட்ரோத் எனப்படும் இரண்டாம் கப்பலினை விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை கப்பல் கட்டும் தளத்தில் கடற்படையில் இணைத்தது.
- தமிழ்நாடு அரசானது, போருசியா டார்ட்மண்டு எனப்படும் ஜெர்மன் கால்பந்து குழுவுடன் இணைந்து தனது முதல் விளையாட்டுத் தொழில்நுட்பக் காப்பு மையத்தை நிறுவ உள்ளது.
  - இந்தத் திட்டத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் துறையின் கீழான மாநிலத்தின் புத்தொழில் திட்டமான ஸ்டார்ட் அப் தமிழ்நாடு செயல்படுத்த உள்ளது.
- கோல் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான சவுத் ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் (SECL), இந்திய அரசின் சிறப்பு பிரச்சாரம் 5.0 என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக சத்தீஸ்கரின் கோர்பாவில் உள்ள மத்தியப் பயிலரங்கில் முழுமையாக பெண்களால் இயக்கப்படும் அதன் முதல் மத்தியச் சேமிப்பு அலகினைத் திறந்துள்ளது.
  - முன்னதாக, SECL நிறுவனமானது முழுமையாக பெண்களால் இயக்கப்படும் அதன் முதல் மருந்தகத்தை சத்தீஸ்கரின் பிலாஸ்பூரில் நிறுவியது.
- 6வது உலகளாவிய நிதி சார் தொழில்நுட்பத் திருவிழாவானது (GFF) மும்பையில் தொடங்க உள்ளது.
  - 'Empowering Finance for a Better World Powered by AI' என்பது இந்த ஆண்டு விழாவின் கருத்துருவாகும்.
- எல்லைச் சாலைகள் அமைப்பு (BRO) ஆனது, கடல் மட்டத்திலிருந்து 19,400 அடி உயரத்தில், லடாக்கின் மிக் லா கணவாயில் உலகின் மிக உயரமான வாகனங்கள் இயங்கக் கூடிய வகையிலான சாலையை அமைத்துள்ளது.

- இந்தப் புதிய சாலையானது, 19,024 அடி உயரத்தில் லடாக்கின் உம்லிங் லாவில் சாலை அமைக்கப்பட்ட அதன் முந்தைய சாதனையை முறியடித்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## இரண்டாவது யானைப் பாகன் கிராமம்




- தமிழ்நாடு முதலமைச்சர் ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள கோழிகமுத்தி யானைகள் முகாமில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது யானைப் பாகன் கிராமத்தைத் திறந்து வைத்தார்.
- இந்தியாவின் முதல் யானைப் பாகன் கிராமமானது, முன்னதாக 2025 ஆம் ஆண்டில் முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள தெப்பக்காட்டில் நிறுவப்பட்டது.
- இங்கு மாநிலத் திட்ட ஆணையத்தால், சூரிய சக்தியில் இயங்கும் ஒரு குறு மின் கட்டமைப்பானது 3.5 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டது.

## நீலகிரியில் மகளிர் பாதுகாப்பு ரோந்து





- பிங்க் பாட்ரோல் எனும் பெண்கள் தலைமையிலான காவல் துறை ரோந்து முன்னெடுப்பானது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பொது இடங்களில் உதவுவதற்காக நீலகிரி மாவட்டத்தில் முதல் முறையாக தொடங்கப்பட்டுள்ளது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதும், பாதிக்கப்

பட்டவர்கள் தயக்கமின்றி குற்றங்களைப் புகாரளிப்பதை எளிதாக்குவதும் இதன் நோக்கமாகும்.

- உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் முழுவதும் பத்து இளஞ்சிவப்பு நிற ரோந்து வாகனங்கள் இயக்கப்படும்.
- பள்ளி மற்றும் கல்லூரி திறப்பு மற்றும் மூடல் நேரங்களில் மாணவிகளை துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பதில் இந்த ரோந்து வாகனங்கள் கவனம் செலுத்தும்.

## தமிழ்நாட்டில் புற்றுநோயியல் நல சேவை

- தமிழ்நாட்டின் முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் மூலம் 2023 ஆம் ஆண்டில் புற்றுநோயியல் சிகிச்சைகளுக்காக 142 கோடி ரூபாய் செலவிடப் பட்டது.
- இந்த செலவு ஆனது 2024 ஆம் ஆண்டில் 147 கோடி ரூபாயாக உயர்ந்து 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை 84 கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- இந்தத் திட்டமானது, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை நெறிமுறைகளுடன் மருத்துவம், அறுவை சிகிச்சை மற்றும் கதிர்வீச்சுப் புற்று நோயியல் ஆகியவற்றிற்கான உதவியினை வழங்குகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவப் புற்றுநோயியல் துறைக்காக 183 மருத்துவமனைகளும், அறுவை சிகிச்சை புற்றுநோயியல் துறைக்காக 171 மருத்துவமனைகளும் பட்டியலிடப்பட்டுள்ளன.
- CMCHIS மூலம் 52 மருத்துவமனைகள் கதிர்வீச்சு புற்றுநோயியல் சேவைகளை வழங்குகின்றன.




# தேசியச் செய்திகள்

## ICGS அக்சர்

- இரண்டாவது அடம்யா வகை விரைவு ரோந்துக் கப்பலான ICGS அக்சர், புதுச்சேரியின் காரைக்காலில் படையில் இணைக்கப்பட்டது.
- இந்தக் கப்பலானது, கோவா ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனத்தினால் 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டுக் கூறுகளுடன் வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டது.
- 'அக்சர்', அதாவது 'அழியாதது' என்று பொருள்படும் இந்தக் கப்பலின் பெயரானது, கடலோரக் காவல்படையின் பாதுகாப்பான மற்றும் தூய்மையான கடல்களுக்கான

அதன் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.




## தேசிய நெடுஞ்சாலைகளில் QR குறியீடு கொண்ட அடையாளப் பலகைகள்




- இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது தேசிய நெடுஞ்சாலைகளில் QR குறியீடு கொண்ட செங்குத்து அடையாளப் பலகைகளை நிறுவ உள்ளது.
- இந்தப் பலகைகள் ஆனது நெடுஞ்சாலை எண், சங்கிலித் தொடர் தொலைவுக் குறியீடு மற்றும் அவசர தகவல் தொடர்பிற்கான விவரங்கள் போன்ற குறிப்பிட்டத் தகவல்களைக் கொண்டிருக்கும்.
- நெடுஞ்சாலை ரோந்து, சுங்கச் சாவடி மேலாளர், உள்ளக பொறியாளர் மற்றும் அவசர உதவி எண் 1033 ஆகியவற்றுக்கான தொடர்பு எண்கள் இதில் சேர்க்கப்படும்.
- QR குறியீடுப் பலகைகள் ஒய்வுப் பகுதிகள், சுங்கச்சாவடிகள், சரக்குந்துகள் நிறுத்துமிடங்கள், நெடுஞ்சாலை தொடக்க மற்றும் முடிவுப் பகுதிகளுக்கு அருகில் வைக்கப் படும்.

❖ சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும், பயணிகள் முக்கியமான நெடுஞ் சாலைத் தகவல்களை எளிதாக அணுகுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவில் பால்வளத் துறை 2025

❖ கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் பால்வளத் துறையானது 70% விரிவடைந்துள்ளது.

❖ பால் உற்பத்தியானது, 2014-15 ஆம் ஆண்டில் 146 மில்லியன் டன்னிலிருந்து 2023-24 ஆம் ஆண்டில் 239 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.

❖ 2029 ஆம் ஆண்டிற்குள் 75,000க்கும் மேற்பட்ட பால் கூட்டுறவுகளை நிறுவ அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது.

❖ மூன்று புதிய பல மாநிலக் கூட்டுறவு சங்கங்கள் அங்கீகரிக்கப் பட்டுள்ளன:
  - அவற்றுள் ஒன்று கால்நடை தீவன உற்பத்தி, நோய் கட்டுப்பாடு மற்றும் செயற்கை கருவூட்டல் ஆகியவற்றிற்காகவும்;
  - இரண்டாவது மாட்டு சாண மேலாண்மை மாதிரிகளை உருவாக்குவதற்காகவும்
  - மூன்றாவது இறந்த கால்நடை பாகங்களை சுழற்சி முறை வடிவில் பயன்படுத்துவதற்காகவும் ஆகும்.

❖ ஹரியானாவில் புதிதாக திறக்கப்பட்ட சபர் பால் பண்ணையானது, தயிர், மோர் மற்றும் யோகர்ட் ஆகியவற்றிற்கான இந்தியாவின் மிகப்பெரிய உற்பத்தி அலகு ஆகும்.

❖ 2028-29 ஆம் ஆண்டிற்குள் 100 மில்லியன் லிட்டரை எட்டும் இலக்குடன் இந்தியாவின் பால் பதப்படுத்தும் திறன் ஆனது தற்போது ஒரு நாளைக்கு 660 லட்சம் லிட்டராக உள்ளது.

❖ தனி நபருக்கான பால் கிடைக்கும் தன்மை 124 கிராமிலிருந்து 471 கிராமாக அதிகரித்து உள்ளது.




## NATPOLREX-X 2025

❖ இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தியாவின் முதன்மையான எண்ணெய்க் கசிவு தணிப்பு நடவடிக்கை பயிற்சியான NATPOLREX-X 2025 ஆனது கடல்

சார் மாசு தொடர்பான அவசரநிலைகளை உருவகப்படுத்தி சென்னை கடற்கரையில் நடத்தப்பட்டது.

- இந்தப் பயிற்சியானது, 30க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பல அரசு நிறுவனங்கள், துறைமுகங்கள், எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் சர்வதேசக் கண்காணிப்பு அமைப்புகளை ஈடுபடுத்துவதன் மூலம் தேசிய தயார்நிலையை பரிசோதிக்கிறது.
- இது பிரத்தியேக கப்பல்கள், விமானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேம்பட்டப் கட்டுப்பாடு, பரவல் மற்றும் மீட்பு நுட்பங்களில் கவனம் செலுத்துகிறது.
- NATPOLREX-X ஆனது நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதோடு, அவசரகாலத் திட்டங்களையும் செம்மைப்படுத்துவதோடு இது MARPOL 73/78 உடன்படிக்கையின் கீழான உலகளாவியக் கடல்சார் சுற்றுச்சூழல் தர நிலைகளுடன் ஒத்துப் போகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## த்வானி அதிமீயொலி எறிகணை




- இந்தியா த்வானி என்ற அதி மீயொலி இழைவியக்க வாகனத்தினை (HGV) உருவாக்கி வருகிறது என்பதோடு இது மேக் 5 வேகத்திற்கு மேல் (மணிக்கு 7,400 கிலோமீட்டருக்கு

மேல்) இயங்கும் திறன் கொண்டது.

- இது நீண்ட தூர இலக்குகளின் துல்லியமான தாக்குதல்களுக்காக உள்நாட்டுத் தொழில் நுட்பத்துடன் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- த்வானி 3,000 டிகிரி செல்சியஸ் வரை தாங்கும் வெப்ப-எதிர்ப்புத் திறன் கொண்ட பீங்கான் கலவைகளுடன் கூடிய ரேடாருக்குப் புலப்படாத, கலப்பு இறக்கை-முழு கட்டமைப்பை பயன்படுத்துகிறது.
- இது 6,000 முதல் 10,000 கிலோமீட்டர் தூரம் வரை இயங்கும் திறனைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு 2029 ஆம் ஆண்டிற்குள் இது செயல்படத் தொடங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மஞ்சள் மூக்கு நாரைகள்

- அசாமின் காசிரங்கா தேசியப் பூங்காவில் ஒரு ஜோடி மஞ்சள் மூக்கு நாரைகள் தென்பட்டன.
- இதற்கு முன்னதாக 2004, 2005 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வலசை போகும் பறவைகள் கணக்கெடுப்பின் போது மட்டுமே பதிவு செய்யப்பட்ட இவை தற்போது தென்பட்டுள்ளது ஓர் அரிய நிகழ்வாகும்.
- யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமான காசிரங்கா அதன் வளமான ஈர நிலங்கள் மற்றும் பல்வேறு வலசை போகும் நீர்ப்பறவைகளுக்குப் பெயர் பெற்றது.





# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## மருத்துவத்திற்கான நோபல் பரிசு 2025

- மேரி E. பிரன்கோவ், பிரெட் ராம்ஸ்டெல் மற்றும் ஷிமோன் சகாகுச்சி ஆகியோருக்கு 2025 ஆம் ஆண்டிற்கான உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசு வழங்கப் பட்டுள்ளது.

- அவர்கள் புற நோயெதிர்ப்பு சகிப்புத்தன்மை தொடர்பான ஒரு காரணியைக் கண்டு அறிந்தனர்.
- இது நோயெதிர்ப்பு அமைப்பு உடலின் திசுக்களைத் தாக்குவதைத் தடுக்கும் ஒரு முக்கிய வழிமுறையாகும்.
- அவர்களின் ஒருங்கிணைந்த ஆராய்ச்சியானது, FOXP3 என்பது ஒழுங்குமுறை T செல்களின் முதன்மை சீராக்கி என்பதை நிரூபித்ததோடு, நோயெதிர்ப்பு சுய சகிப்புத் தன்மையை பராமரிப்பதில் அவற்றின் செயல்பாட்டை உறுதிப்படுத்துகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பானது தற்போது மருத்துவப் பரிசோதனைகளில் உள்ள சில சிகிச்சைகளுக்கும் புற்றுநோய், தன்னுடல் தாக்க நோய்கள் மற்றும் உறுப்பு மாற்று மருத்துவத்தில் புதிய சிகிச்சைகளுக்கும் அடித்தளம் அமைத்துள்ளது.





## நடன காசிநாதன்



- புகழ்பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளரும் கல்வெட்டு நிபுணருமான நடன காசி நாதன் காலமானார்.
- அவர் தனது பணியின் போது பல கல்வெட்டுகள் மற்றும் நடுகற்களைக் கண்டறிந்தார்.

- பண்டைய தமிழ் எழுத்து வடிவமான வட்டெழுத்தை புரிந்து கொள்ளும் திறனுக்காக அவர் நன்கு அறியப்பட்டவர் ஆவார்.
- கல்லெழுத்துக் கலை, சோழர் செப்பேடுகள் மற்றும் தமிழர் காசு இயல் உள்ளிட்ட பல தமிழ் புத்தகங்களை அவர் எழுதியுள்ளார்.
- Under Sea Exploration off the Shore of Poompuhar மற்றும் The Metropolis of the Medieval Cholas போன்ற ஆங்கில படைப்புகளையும் அவர் எழுதியுள்ளார்.
- அவர் தமிழ்நாடு அரசின் உ.வே.சா. விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## இயற்பியலுக்கான நோபல் பரிசு 2025




- இயற்பியலுக்கான நோபல் பரிசானது, ஜான் கிளார்க், மைக்கேல் H. டெவோரெட் மற்றும் ஜான் M. மார்டினிஸ் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.
- அவர்களுக்கு "மின் சுற்றுகளில் பெரிய அளவிலான குவாண்டம் இயந்திர ஊடுருவல் மற்றும் ஆற்றல் அளவீட்டைக் கண்டுபிடித்ததற்காக" இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- இது குவாண்டம் மறைகுறியாக்கம், குவாண்டம் கணினிகள் மற்றும் குவாண்டம் உணர்வுக் கருவிகள் உள்ளிட்ட அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான குவாண்டம் தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

# முக்கிய தினங்கள்

## மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் 2025 – அக்டோபர்

- மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 01 முதல் 31 ஆம் தேதி வரை அனுசரிக்கப்படுகிறது.
- இது விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆரம்பகாலக் கண்டறிதலை ஊக்குவித்தல் மற்றும் சரியான நேரத்தில் மற்றும் தரமான பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களை கௌரவிப்பதோடு, அதற்கான

கூட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது.

- இந்த மாதம் ஆனது முதன்முதலில் 1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கொண்டாடப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Every Story is Unique, Every Journey Matters" என்பதாகும்.




## தேசிய வனவிலங்கு வாரம் 2025 - அக்டோபர் 2/8




- இது அக்டோபர் 02 முதல் 08 ஆம் தேதி வரை இந்தியா முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினம் குறித்து, வனவிலங்குப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சமநிலை பற்றிய

விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக முதன்முதலில் 1952 ஆம் ஆண்டில் கருத்தாக்கம் செய்யப்பட்டது.

- "Sewa Parv" எனப்படும் 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவானது இயற்கையின் மீதான சேவை மற்றும் பொறுப்பை மையமாகக் கொண்டதாகும்.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆனது ஹரியானாவின் மானேசரில் 2025 ஆம் ஆண்டிற்கான வனவிலங்கு வாரத்தினைத் தொடங்கியது.

## உலக விண்வெளி வாரம் 2025 - அக்டோபர் 4/10





- இது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 04 முதல் 10 ஆம் தேதி வரை உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- மனித நிலையை மேம்படுத்துவதற்கு விண்வெளி அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் பங்களிப்புகளைக் கொண்டாடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொதுமக்களுக்கு இது குறித்து கல்வி கற்பித்தல், இளைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் விண்வெளி ஆய்வில் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக இது உலக அளவில் நினைவு கூரப் படுகிறது.
- இந்தத் தேதிகள் ஆனது 1957 ஆம் ஆண்டு அக்டோபர் 04 ஆம் தேதியன்று ஸ்புட்னிக் விண்ணில் ஏவப்பட்ட நிகழ்வு மற்றும் 1967 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதியன்று விண்வெளி ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நிகழ்வு ஆகிய இரண்டு முக்கிய நிகழ்வுகளைக் குறிக்கின்றன.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Living in Space" என்பதாகும்.

## உலக பெருமூளை வாதம் தினம் 2025 - அக்டோபர் 06


- பெருமூளை வாதம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் சம உரிமைகள், அணுகல் மற்றும் உள்ளடக்கத்திற்காக வாதிடுவதையும் இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- உலகளவில் பெருமூளை வாத நோயால் பாதிக்கப்பட்ட 17 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிலைப்படுத்த இத்தினம் நினைவு கூரப்

படுகிறது.

- உலகளாவிய நடவடிக்கைகளுக்கான குரல்களை ஒன்றிணைத்து நெருக்கடி கொடுப்பதற்காக, பெருமூளை வாதக் கூட்டணியால் இந்த நாள் முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Unique and United" என்பதாகும்.




## உலக வாழ்விட தினம் 2025 - அக்டோபர் 06




- இது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- சிறு நகரங்கள் மற்றும் நகரங்களின் நிலை மற்றும் போதுமான தங்குமிடம் பெறுவதற்கான அனைத்து மக்களின் உரிமையைப் பற்றி சிந்திப்பதே இதன் நோக்கம் ஆகும்.

- 1985 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இது முதன்முதலில் 1986 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Urban Crisis Response" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★